பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
28 07 2024 **SUNDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா பதக்கங்களை வெல்ல நாட்டு மக்கள் அனைவரும் வாழ்த்துக்களை தெரிவிக்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பிஜேபி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்றுள்ள மாநாடு, இரண்டாவது நாளாக இன்றும் புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

3. வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று ஜப்பான் சென்றடைந்தார்.

4. நடப்பாண்டில் அரசு பள்ளிகளில் புதிய வகுப்பறைகளை கட்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தமிழக அரசு கூறியுள்ளது.

5. ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்றுள்ளவர்கள் பதக்கங்களை வெல்ல நாட்டு மக்கள் அனைவரும் வாழ்த்துக்களை தெரிவிக்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மன்கிபாத் நிகழ்ச்சியில் பிரதமர் இக்கோரிக்கையை விடுத்தார்.

//(சவுண்ட் பைட் - மோடி (1) 61 செகண்ட்ஸ்)//

அஸ்ஸாமின் சராயுதேவு மைதாம், யுனெஸ்கோவின் புராதன சின்னங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் தெரிவித்தார்.

//(சவுண்ட் பைட் - மோடி (2) 35 செகண்ட்ஸ்)//

தேசிய கைத்தறி தினம் வரும் 7ஆம் தேதி கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய திரு. நரேந்திர மோடி, கைத்தறி ஆடைகளுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

//(சவுண்ட் பைட் - மோடி (3) 49 செகண்ட்ஸ்)//

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, 1 9 3 3 என்ற இலவச தொலைபேசி உதவி எண் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இதில் தெரிவிக்கப்படும் தகவல்கள் ரகசியமாக வைக்கப்படும் என்றும், போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற இலக்கோடு மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் இதில் பங்கேற்க விரும்புவோர் இந்த தொலைபேசி உதவி எண் சேவையை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

புலிகள் பாதுகாப்பிற்காக இதுவரை இல்லாத அளவிற்கு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

//(சவுண்ட் பைட் - மோடி (4) 22 செகண்ட்ஸ்)//

சுதந்திர தினம் அடுத்த மாதம் 15ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, இல்லந்தோறும் மூவர்ணக்கொடி இயக்கத்தில் அனைவரும் உற்சாகமாக பங்கேற்க வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

//(சவுண்ட் பைட் - மோடி (5) 90 செகண்ட்ஸ்)//

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் இரவு 8 மணிக்கு சென்னை அகில இந்திய வானொலியில் மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>><<<<

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று ஜப்பான் சென்றடைந்தார்.

டோக்கியோ விமான நிலையத்தில் அந்நாட்டிற்கான இந்திய தூதர் **Sibi George** அவரை வரவேற்றார்.

நாளை நடைபெறவுள்ள **QUAD** அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

இதில், அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா வெளியுறவு அமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர்.

இந்த அமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து, இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

**>>>><<<<**

பிஜேபி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்றுள்ள மாநாடு, இரண்டாவது நாளாக இன்றும் புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

மத்திய அமைச்சர்கள் மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகள் இதில் பங்கேற்கின்றனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்த மாநாட்டின் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்று கலந்துரையாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

நடப்பாண்டில் அரசு பள்ளிகளில் புதிய வகுப்பறைகளை கட்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

சேலம் மாவட்டத்தில் அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள்களை வழங்கி அவர் பேசினார்.

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை மாணவர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் காரணமாக, ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இன்று காலை நிலவரப்படி, நீர்வரத்து 1 லட்சத்து 55 ஆயிரம் கனஅடியாக உள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 47 செகண்ட்ஸ்)

>>>><<<<

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

தம்புலாவில் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

>>>><<<<

இந்தியா - இலங்கை இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்று, இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

>>>><<<<

ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் போட்டியில் மகளிர் 10 மீட்டர் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் மனுபாக்கர் இன்று பங்கேற்கிறார்.

>>>>END<<<<